கொண்டாவது அரசாங்கமே அதற்கு மானியமாகவோ அல்லது வேறு கோயில்களின் நிதியையோ மாற்றி அளிக்க வழிவகை செய்வார்களா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: அந்தத் திருமண மண்டபத்தைக் கட்ட போதுமான நிதி வசதி அந்தக் கோயிலில் இருக்கிற காரணத்தினுல் வேறு கோயிலில் இருந்து மாற்ற வேண்டிய அவசியம் இல்லை.

பழனி கோயில் திருவிழாச் செலவு.

***596 வினு—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

அண்மையில் பழனி கோயிலில் நடைபெற்ற கும்பாபிஷேகத் திருவிழாவுக்கு அரசு செலவிட்ட தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: ஏதுமில்லை.

திருத்தணி கோயிலுக்கு புதிய தேர்.

***597 வினு—திரு. வை. பாலசுந்தரம்:** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

திருத்தணி கோயிலுக்கு தங்கத்தேர் செய்வதற்கான செயற் குறிப்பு ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: ஆம்.

திரு. வை. பாலசுந்தரம்: இப்படி தங்கத் தேர் செய்கிறபோது அரசின் சம்மதம் பெற்றுச் செய்கிருர்களா? அல்லது கோயிலில் இருக்கிறவர்களே முடிவு செய்துகொண்டு செய்கிருர்களா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: கோயிலில் இருக்கிற அறங் காவலர்கள் முடிவு செய்துகொண்டு, அறநிலையத் துறை ஆணையரின் அனுமதி பெற்று நிறைவேற்றுகிருர்கள்.

1973 டிசம்பர் 3]

திரு. ஆ. பரந்தாமன்: திருத்தணி திருமுருகன் ஆலயத்தில் சேர்த்து வைத்திருந்த பொன்னை சில மாதங்களுக்கு முன்னால் பம்பாய் மாநிலத்தில் உருக்கினார்கள் என்று கேள்விப்பட்டோம். அப்படி உருக்கப்பட்ட பொன் எவ்வளவு?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: அதுபற்றிய விவரம் இல்லை. தனிக் கேள்வி போடவேண்டும்.

வீரவநல்லூர் அருள்திரு பூமிநாதசுவாமி கோயில் அறங்காவலர்கள்

*598 வின—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்: மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், வீரவநல்லூர் என்னும் ஊரில் உள்ள அருள்திரு பூமிநாதசுவாமி கோயில் சிறுகாலசந்தி கட்டளையில் உள்ள அறங்காவலர் பதவிகள் 23—5—1973 முதல் நிரப்பப்படாமல் உள்ளன என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதற்குக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) & (இ) இப்பதவிகள் 23—7—1973 முதல் காலியாக உள்ளன. இவற்றை நிரப்ப, உரிய நடவடிக்கைகள் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

TRUTH ALONE TRIUMPHS

வெள்ளிக்குறியிடப்படாத வினக்கள்.

அரசு ஊழியர்களுக்கு மலைவாசப்படி.

1 வின—திரு. அ. தேவேந்திரன்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

அரசு ஊழியர்களுக்கு அண்மையில் மலைவாசப்படி உயர்த்தப்பட்டு உள்ளதா?

விடை—

இல்லை.